தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

இரண்டாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2015**

**P202** சமயத் தமிழ் இலக்கியம்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. எண்குணத்தான் எனச் சிவனைக் குறிக்கும் நூல் எது?
2. ஒன்பதாம் திருமுறையில் இடம்பெற்ற முருகன் தலம் எது?
3. திருவருட்பாவின் ஆசிரியர் யார்?
4. காஞ்சிப் புராணம் எழுதியவர் யார்?
5. திருமாலுக்குரிய நாள் எது?
6. திருமாலை என்ற நூலை அருளியவர் யார்?
7. வைணவச் சிற்றிலக்கியப் பரணி ஒன்றன் பெயரைக் குறிப்பிடுக.
8. சமண அறநூல் எது?
9. பௌத்தத் துறவியர் பள்ளியை எவ்விதம் குறிப்பர்?
10. மனித உறவுகள் மதச் சட்டங்களை விட மேலானது என்பதைப் புலப்படுத்தும் நாடகம் எது?
11. முக்தி வழி அம்மானை எந்த நூலைத் தழுவியது?
12. முதல் இஸ்லாமிய உரைநடை இலக்கியம் எது?
13. தேவமாதா அந்தாதியின் ஆசிரியர் யார்?
14. பிங்கல நிகண்டிற்குப் பின்னர்த் தோன்றிப் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட நிகண்டு எது?
15. மக்கள், தேவர் இருவருக்கும் ஒத்த முடிவினையுடைய அறம் எது?

## பிரிவு - 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. முதல் திருமுறை – குறிப்பு வரைக.
2. மதுரைத் தலம் குறித்த சைவ இலக்கியங்களைக் கூறுக.
3. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் – சிறு குறிப்பு தருக.
4. நம்மாழ்வாரின் பிற பெயர்களைக் குறிப்பிடுக.
5. சமணத்தின் வேறு பெயர்களைக் காரணங்களுடன் கூறுக.
6. பௌத்த சமயத்திற்கு அசோகரின் பங்களிப்பு என்ன?
7. கிறித்தவப் புதுக்கவிதை நூல்களையும், அவற்றை எழுதிய கவிஞர்களையும் குறிப்பிடுக.
8. கிறித்தவப் புதினப் படைப்புகள் பற்றிச் சுருக்கமாகக் கூறுக.

## பிரிவு - 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) சங்க இலக்கியங்களில் காணப்படும் சிவன் பற்றிய குறிப்புகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆண்டாளின் திருமால் வழிபாட்டினை நும் பாடப்பகுதியின் துணைகொண்டு விளக்குக.

2. (அ) சமண சமயப் பெருங்காப்பியங்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) மணிமேகலை கூறும் பௌத்த சமயக் கோட்பாடுகளை விளக்கமாக எழுதுக.

3. (அ) கிறித்தவச் சிற்றிலக்கியங்கள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) இக்கால இசுலாமியக் கவிஞர்கள் எழுதியுள்ள மரபுக்கவிதைகளும் புதுக்கவிதைகளும் பற்றி விவரிக்க.

***